பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும் ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. தலைமையில் திருப்பத்தூர் மாவட்ட திட்டக் குழு உறுப்பினர்களாக புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மற்றும் மாவட்ட அறங்காவலர் குழு நிர்வாகிகள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள். இந்நிகழ்வில் மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் எ.வ.வே.கம்பன், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், திருப்பத்தூர் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் என்.கே.ஆர்.சூரியகுமார் மற்றும் நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டார்கள்.

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. சார்பில் நூற்றாண்டு காணும் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு டென்னிஸ் பால் கிரிக்கெட் விளையாட்டு விழாவை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி துவக்கி வைத்து பரிசுகளை வழங்கினார். இதில் ஏ.கே.சுந்தரமூர்த்தி, வினோத் காந்தி, ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ.சிவானந்தம், குமுதா, மஸ்தான், அசோகன், கண்ணயன், ஒன்றியச் செயலாளர்கள் சௌந்தர், ஜோதி,வடிவேலு, எஸ்.ஜி.சி.பெருமாள், பாலாஜி, சிவா, தொன் பாஸ்கோ மற்றும் மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள் மற்றும் வேதா சீனிவாஸ், சிவா மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

கூடுதல் மின் கட்டண உயர்வு குறித்த - ஒன்றிய அரசின் அநியாய அறிவிப்பு

கார்ப்பரேட்டுகள் கையில் மின்துறை முற்றாக ஒப்படைப்பதன் முன்னோட்டம்!

‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, ஜூன் 27-

“மின்சாரத்தை அதிகமாக பயன்படுத்தும் நேரத்திற்கு கூடுதல் கட்டணம் என்ற ஒன்றிய அரசின் அநியாய அறிவிப்பு, கார்ப்பரேட்டுகள் கையில் மின்துறையை முற்றாக ஒப்படைப்பதன் முன்னோட்டம்” என்று தீக்கதிர் நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து 26.7.2023 தேதிய ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-

காலை 6 மணி முதல் 10 வரையும் மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரையிலும் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கு கூடுதலாக 20 சதவீதம் கட்டணம் வசூலிக்கப்படும் என்று ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. இதன்மூலம் மாநிலங்களுக்கும் மக்களுக்கும் நெருக்கடியை நரேந்திர மோடி அரசு உருவாக்கியுள்ளது. மின் தேவை அதிகமாக இருக்கும் நேரங்களில் 10 சதவீதம் முதல் 20 சதவீதம் வரை மின் கட்டணத்தை உயர்த்த வேண்டும் என ஒன்றிய அரசு கூறியுள்ளது.

தீக்கதிர்

2023 ஜூன் 26 திங்கட்கிழமை

ஒன்றிய அரசின் அநியாய அறிவிப்பு

காலை 6 மணி முதல் 10 வரையும் மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரையிலும் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கு கூடுதலாக 20 சதவீதம் கட்டணம் வசூலிக்கப்படும் என்று ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. இதன்மூலம் மாநிலங்களுக்கும் மக்களுக்கும் நெருக்கடியை நரேந்திர மோடி அரசு உருவாக்கியுள்ளது. மின் தேவை அதிகமாக இருக்கும் நேரங்களில் 10 சதவீதம் முதல் 20 சதவீதம் வரை மின் கட்டணத்தை உயர்த்த வேண்டும் என ஒன்றிய அரசு கூறியுள்ளது.

ஒன்றிய அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பினால் தமிழகத்திற்கு பாதிப்பு இல்லை என்று தமிழ்நாடு மின்சார வாரியம் கூறியுள்ளது. தமிழகத்தில் மின் கட்டணத்தை நிர்ணயம் செய்யும் அதிகாரம் தமிழக ஒழுங்குமுறை ஆணையத்திற்கே உள்ளது என்றும் அதன்படி உச்சநேர அளவு கட்டணம் வீட்டு நுகர்வோர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட

ஒன்றிய அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பினால் தமிழகத்திற்கு பாதிப்பு இல்லை என்று தமிழ்நாடு மின்சார வாரியம் கூறியுள்ளது. தமிழகத்தில் மின் கட்டணத்தை நிர்ணயம் செய்யும் அதிகாரம் தமிழக ஒழுங்குமுறை ஆணையத்திற்கே உள்ளது என்றும் அதன்படி உச்சநேர அளவு கட்டணம் வீட்டு நுகர்வோர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட வில்லை என்றும் அது தெரிவித்துள்ளது.

ஆனாலும் ஒன்றிய அரசின் அறிவிப்பு என்பது தலைக்குமேல் தொங்கும் கத்தியாகவே உள்ளது. ஏற்கெனவே உதய் மின் திட்டத்தை ஏற்க வேண்டும் என தமிழ்நாடு உள்ளிட்ட அனைத்து மாநிலங்களுக்கும் ஒன்றிய அரசு நிர்ப்பந்தம் கொடுத்தது. இந்தத் திட்டத்தை ஏற்காவிட்டால் மாநில அரசுகள் கடன்பெற முடியாது என்று ஒன்றிய அரசு மிரட்டியது. கொரோனா காலத்தில் நிவாரணத் தொகை பெறுவதற்குக் கூட உதய் மின் திட்டத்தை முன்நிபந்தனையாக ஒன்றிய நிதி அமைச்சர் முன்வைத்தார்.

மின்சார சட்டத்திருத்த மசோதா நாடாளுமன்ற மக்களவையில் ஏற்கெனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மின்விநியோகத்தை தனியாருக்கு தாரைவார்ப்பது, மாநில அரசுகளின் அதிகாரத்தை பறிப்பது உள்ளிட்ட ஆபத்தான அம்சங்கள் இதில் இடம் பெற்றுள்ளன. இம்மசோதா தற்போது நிலைக்குழுவுக்கு அனுப்பப்பட்டிருந்தாலும், இதை சட்டமாக்குவதில் மோடி அரசு பிடிவாதமாக உள்ளது. இந்த சட்டம் நடைமுறைக்கு வந்தால் விவசாயத்திற்கான இலவச மின்சாரம் 100 யூனிட் வரை வீடுகளுக்கு இலவச மின்சாரம் என தமிழகத்தில் உள்ள சலுகைகள் பறிபோகும்.

பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலையை தொடர்ந்து உயர்த்தி செங்குத்தான நிலையில் நிறுத்தி வைத்துள்ள ஒன்றிய பா.ஜ.க. கூட்டணி அரசு மின் கட்டணத்தையும் உயர்த்த வகை செய்கிறது. மின்சாரத்தை அதிகமாக பயன்படுத்தும் நேரத்திற்கு கூடுதல் கட்டணம் என்பது அப்பட்டமான அநீதியாகும். மாநில அரசுகள் இதை ஏற்கக்கூடாது. கார்ப்பரேட் முதலாளிகள் கையில் மின்துறையை முற்றாக ஒப்படைப்பதன் முன்னோட்டமாகவே இந்த கட்டண உயர்வை மோடி அரசு அறிவித்துள்ளது. இல்லங்களிலும், விவசாயம், தொழில்துறையிலும் இருள் சூழ வழிவகுக்கும் இத்திட்டம் முறியடிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

செட்டியப்பட்டி ஊராட்சியில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் முழுமையாக நலஉதவிகள்!

கல்லுப்பட்டியில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு ரூ.8 லட்சத்தில் புதிய நாடக மேடை!

அமைச்சர் ஐ.பெரியசாமி திறந்து வைத்தார்!

ஆத்தூர் ஜூன் 27-

செட்டியபட்டி ஊராட்சியில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் 100 சதவீதம் நலத்திட்ட உதவிகள் முழுமையாக நிறைவேற்றப்படும் என்று செட்டியபட்டி ஊராட்சி மன்ற புதிய அலுவலக கட்டிடத்தை திறந்து வைத்து அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார். கல்லுப்பட்டியில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு ரூ.8லட்சம் மதிப்பில் புதிய நாடக மேடையை திறந்து வைத்தார்.

திண்டுக்கல்மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம், செட்டியபட்டி ஊராட்சியில் 25.37 லட்சம் மதிப்பில் புதிய ஊராட்சி மன்ற அலுவலகம் திறப்பு விழா கல்லுப்பட்டியில் ஆத்தூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.8 லட்சம் மதிப்பில் புதிய நாடக மேடை திறப்பு விழாக்கள் நடைபெற்றது.

விழாவிற்கு ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன் தலைமை தாங்கினார். ஒன்றிய துணை பெருந்தலைவர் ஹேமலதா மணிகண்டன், ஒன்றிய செயலாளர் முருகேசன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் லாரன்ஸ், தட்சிணாமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஊராட்சி மன்ற தலைவர் வி.ராஜா வரவேற்று பேசினார். விழாவில் புதிய நாடக மேடையை திறந்து வைத்த பின்பு ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடத்தை திறந்து வைக்க வந்த ஊரகவளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி சிறப்பாக ஊராட்சியில் பணியாற்றி வரும் ஊராட்சிமன்ற தலைவர் ராஜாவை கௌரவிக்கும் வகையில் அவரை கொண்டு ஊராட்சிமன்ற அலுவலகத்தை திறந்து வைத்தார். அதன் பின்னர் குத்துவிளக்கு ஏற்றிய பின்பு கல்வெட்டை திறந்து வைத்து பொதுமக்கள் மத்தியில் பேசிய ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி தி.மு.க. ஆட்சி நடைபெறும் காலங்களில் தான் செட்டியபட்டி ஊராட்சிக்கு நலத்திட்டங்கள் அதிகளவில் செயல்படுத்தப்படுகிறது. குறிப்பாக கடந்த முறை தி.மு.க. ஆட்சியின் போது கல்லுபட்டி - வேளாங்கண்ணி புரத்திற்கு சாலை வசதி செய்து கொடுக்கப்பட்டது.

அதன்பின்னர் அ.தி.மு.க. ஆட்சியில் 10 வருடங்களாக எந்த ஒரு நலத்திட்டங்களும் செயல்படுத்தவில்லை. தற்போது தி.மு.க. ஆட்சியின் போது கல்லுப்பட்டி பொதுமக்கள் பயன்பாட்டிற்காக புதிய நாடக மேடையும் ஊராட்சி பொதுமக்கள் நலன் கருதி புதிய ஊராட்சி மன்ற அலுவலகம் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது. இது தவிர வேளாங்கண்ணிபுரத்திலிருந்து கல்லுப்பட்டி வரும் வழியில் தரைப்பாலம் கட்டியுள்ளார்கள்.

அதுவும் விரைவில் நிவர்த்தி செய்து கொடுக்கப்படும். இங்குள்ள பள்ளிகளை தரம் உயர்த்தி மேல்நிலை பள்ளிகளாகவும், உயர்நிலை பள்ளிகளாகவும் மாற்றியது தி.மு.க. அரசு தான் என்றார். தற்போது பள்ளியின் வளர்ச்சிக்காக ஆசிரியர் பெருமக்கள் மாணவர்கள் நலன் கருதி கூடுதல் வகுப்பறைகள் கேட்டுள்ளார்கள். ஏற்கனவே ஊராட்சி மன்ற தலைவர் ராஜாவும் மனு கொடுத்துள்ளார். விரைவில் கனிம நிதியில் புதிய வகுப்பறைகள் கட்டிக்கொடுக்கப்படும் என்றார்.

அப்போது அங்கு கூடியுள்ள 100 கணக்கான மக்கள் மகிழ்ச்சியில் கைதட்டி ஆரவாரம் செய்தனர். செட்டியபட்டி ஊராட்சியில் உள்ள வேளாங்கண்ணிபுரம், கல்லுப்பட்டி, செட்டியபட்டி, இளையாழ்வார்நகர், கே.பி.டி. நகர், வளையபட்டி, விஜயநகரம், விநாயகபுரம் உட்பட 9 கிராமங்களில் வசிக்கும் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் 100 சதவீதம் கிடைக்கும் வகையில் நலத்திட்ட பணிகள் செயல்படுத்தப்பட உள்ளன என்றார். விரைவில் வளையபட்டி முதல் சிறுமலை அடிவாரம் வரை விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை கொண்டு வரும் வகையில் ரூ.1 கோடியே 81 லட்சம் மதிப்பில் தார்சாலைகள் அமைக்கும் பணி தொடங்கப்படும் என்றார்.

நிகழ்ச்சியில் கு.சத்திய மூர்த்தி, ஆத்தூர் நடராஜன், முகாம் அலுவலக தாசில்தார் நவந்த கிருஷ்ணன், வடிவேல்முருகன், ராஜேந்திரன், எம்.சி.பாண்டியன், வசந்தா கென்னடி, தொப்பம்பட்டி கருப்பையா,

பாறைபட்டி வாஞ்சிநாதன், பத்மாவதி ராஜகணேஷ், அறிவழகன், பாலகிருஷ்ணன், எஸ்.ஆர். முருகன், புவனேஸ்வரி அருளரசன், ஜெயராமன், நாகவள்ளி, காணிக்கைசாமி, கோமாளிசாமி, பழனி, ஜான்சி பொன்மலர், பொம்முத்தாய், நந்தினி, ரவி, ராஜேந்திரன், மாரியம்மாள், மற்றும் ஊர் பொது மக்கள், கட்சி நிர்வாகிகள் மணிமாறன், வினோத் ஒச்சப்பன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக ஊராட்சி மன்ற கட்டிட திறப்பு விழாவிற்கு வந்த உள்ளாட்சி மற்றும் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு ஊர் பொது மக்கள் மேளதாளத்துடன் ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர்.

விருதுநகர் தெற்கு மாவட்டம்

விருதுநகர் கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு!

விருதுநகர் தெற்கு மாவட்டம், விருதுநகர் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் கே.எஸ்.செல்லப்பாண்டியன் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **க.கனிமுருகன்**, (வேப்பிலைப்பட்டி, நடுவப்பட்டி அஞ்சல் 626 203, விருதுநகர் மாவட்டம்.) அவர்கள், விருதுநகர் கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 26.6.2023

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

18 ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 14-04-1925

மறைவு: 27-06-2005

ஒருவர் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார் என்பதை அவர் மறைவுக்குப்பின் அவரது புகழும், பெருமையும் எடுத்துச் சொல்லும்-முத்தமிழ் அறிஞர் கலைஞர்

எங்கள் திராவிட குலவிளக்கு ஈகைச்செம்மல்

திரு. **J.K.சுந்தரம்** அவர்களுக்கு

18 ஆம் ஆண்டு நினைவஞ்சலியை செலுத்துகிறோம்.

என்றும் நினைவுடன்,

மனைவி: S.ராஜம்மாள்

மகன்: JKS.மாணிக்கம்

மற்றும் குடும்பத்தினர். குமாரபாளையம்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

அலமேலு அப்பாதுரை

ஜூன் 27 (2001)

தி.மு.க. மகளிர் அணிச் செயலாளராகவும் – தலைமை நிலையச் செயலாளராகவும் – தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் – சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

தி.மு.க. மகளிர் அணியினைச் சிறப்பாக கட்டிக் காப்பாற்றியவர்.

1938ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி திணிப்பு எதிர்ப்பு கிளர்ச்சியிலும், பின்னர் நடைபெற்ற கறுப்புக் கொடி போராட்டம், விலைவாசி உயர்வு போராட்டம் உள்ளிட்ட பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.